[1979 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது, மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கைக்குப் பிறகு இப்போது கொஞ்சம் அதிகமாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது ...... (குறுக்கீடு) .... சேர்த்து கொடுக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இருக்கிறது என்று....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்கிறார். இருக்கிறது என்றால் எழுத்து மூலமாக இருக்கிறது என்று எழுதிக் கொடுங்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அவருக்குக் கிடைத்த உறுதியான தகவலின்படி சொல்கிறார். இருக்கிறது என்று நீங்கள் சொல்வதாக இருந்தால் எழுதிக்கொடுங்கள், நடவடிக்கை எடுப்பது பற்றிப் பதில் சொல்வார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் சமுதாயக் கிணறுகள்

*வினா எண் 707— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1300 சமுதாயக் கிணறுகளை அமைத்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எப்போது முதல் செயல்முறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :-

(அ) 1,068 சமுதாயக் கிணறுகள் அமைக்க திட்டமுள்ளது.

(ஆ) முதற்கட்டமாக 1978-79 ஆம் ஆண்டில் 293 சமுதாயக் கிணறுகள் அமைக்கப்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : கேள்வி தஞ்சை மாவட்டத்தில் சமுதாயக் கிணறுகள் பற்றியது என்றாலும் தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் சமுதாயக் கிணறுகள் அமைக்கின்றபோது விவசாயிகள் பாதிக்கப்படும் சூழ்நிலை இருப்பதால் அதற்கென்று தனியாகக் குழு அமைத்து விவசாயிகளுக்குப் பாதகமா, சாதகமா என்று அறிந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த அளவில்தான் தகவல்கள் இருக்கின்றன. சமுதாயக் கிணறுகள் விவசாயிகளுக்குச் சாதகமாகத்தான் இருக்கும்.

1979 ஏப்ரல் 16]

திரு. துரை கோவிந்தராசன் : தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சமுதாயக் கிணறுகள் அரசின் நிதியிலிருந்து அமைக்கப்பட்டதா? அல்லது வேறுபல நிதிகளிலிருந்து செலவு செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஊராட்சி ஒன்றியத்தின் உபரிநிதியும் சிறு வ்வசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்க கூடிய உதவித் தொகையும் சேர்த்து இந்தக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன.

திரு. துரை முத்துசாமி : இதைப்போன்ற திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா? ஒரு சமுதாயக் கிணறு போட எவ்வளவு மதிப்பீடு? அரசின் பங்குத் தொகை எவ்வளவு? ஊராட்சி ஒன்றியத்தின் பங்குத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மற்ற மாவட்டங்களைப் பற்றிய தகவல் இல்லை. மற்ற மாவட்டங்களிலும் அமைப்பதற்கு ஊராட்சி ஒன்றிய உபரி நிதியிலிருந்து அமைப்பதற்கான செயற்குறிப்பு அனுப்பி வைக்கப்படுமானால் பரிசீலிக்கலாம். 40,000 ரூபாய் செலவில் தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : சமுதாயக் கிணறுகள் வெட்டுவதற்காக ஏற்கனவே ஊராட்சி ஒன்றிய நிதி போடப்படுகிறது. சில இடங்களில் பஞ்சாயத்துக்களில் இருந்து பணம் கட்டி தேவையின் அடிப்படையில் கிணறு வெட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தேவையிருக்குமானால் அதற்கேற்ற அளவுக்கு ஊராட்சி ஒன்றியத்தில் உபரி நிதி இருக்குமானால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

மதுரை நகர அபிவிருத்தி திட்டம்.

*வினா எண் 708—திரு. வ.மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரை நகர அபிவிருத்தித் திட்டத்திற்கு எத்தனை கோடி ரூபாய் அரசு செலவிட உத்தேசித்துள்ளது?

(ஆ) என்னென்ன திட்டங்கள் உள்ளடங்கி உள்ளது ?

(இ) எத்தனை ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்படும் ?